**ஆயுர்வேத வைத்திய சபை - 2023**

-------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஆயுர்வேத வைத்திய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கவுன்சிலின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கவுன்சில் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 7,116,688 | பௌதீக கணிப்பீட்டு அறிக்கை | 2024 ஜனவரி 09 திகதி பண்டக் கணிப்பீட்டுச் சபை நியமனம் செய்யப்பட்டு பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், இது வரை | ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பௌதீக |

| | | | |
|---|---|---|---|
| | | இறுதியறிக்கை கிடைத்திருக்காமையால் அதனை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீட்டு அறிக்கை கால ரீதியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் III ஆவது பகுதி** | | | |
| (i) பிரிவு 11(1)(உ) | பதிவு செய்யப்பட்ட ஆயுர் வேத வைத்தியர்களினால் அவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் மூன்று அங்கத்தவர்கள் சபையின் அங்கத்தவர்கள் என நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த மூன்று அங்கத்தவர்களையும் நியமனம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1963 மார்ச் 15 திகதிய 13564 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் படி ஆயுர்வேத ஆணையாளரினால் வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன், மிகைச் செலவு மற்றும் செய்முறை காலத்திற்கு பொருந்தாத காரணத்தினால் அது முடியாமல் இருந்தமையால், 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் குறிப்பிட்ட பகுதிகளை திருத்திக்கொள்வதற்காக 2022 ஜுன் 07 திகதி வைத்திய சபையினால் தீர்மானிக்கப்பட்டதென. | ஆயுர்வேத சட்டத்தின் படி செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாத செயல் ரீதியான சிரமங்களை அகற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பிரிவுகள் 18 (இ) மற்றும் (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 39 எண்ணிக்கையான தாதி உத்தியோகத்தர்களும் மற்றும் 260 எண்ணிக்கையான மருந்தாளர்கள் காணப்பட்டதுடன், பதிவினை காலத்திற்கு பொருத்தமாக புதுப்படுத்தும் செய்முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கப்பட்டிரு க்காமையால் அந்த | மேற்கத்தேய தாதிப் பயிற்சிப் பெற்றுக்கொள்ளும் தாதி உத்தியோகத்தர்கள் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவைக்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும் அவர்கள் இலங்கை வைத்திய சயையில் பதிவு செய்திருந்தமையால் அவர்கள் இலங்கை வைத்திய சபையில் பதிவு | சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு செயற்பட முடியாவிடின் நடைமுறை அசௌகரிகங்களை அகற்றிக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத வைத்தியத்துறைக்கு விஷேடத்துவமான தாதி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு பயிற்சி வழங்கும் செய்முறையொன்று அறிமுகப்படுத்துவதற்கு பதிலாக மேற்கத்தேய வைத்திய முறையின் கீழ் பயிற்சி பெற்றுள்ள 100 தாதி உத்தியோகத்தர்கள் ஆயுர்வேத வைத்திய துறைக்கு சேர்க்கப்பட்டிருந்தது. அதன் மூலம் சட்டத்தின் குறிக்கோள்கள் எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்தது. | செய்வதற்கு பின்வாங்கியிருத்தல் என ஆயுர்வேத வைத்தியசாலைகளில் சேவைக்கு வருகின்ற மேலைத்தேய மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக மூன்று மாத முழு நேர அடிப்படையிலான பயிற்சியொன்று NITM நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என, மருந்தாளர்களின் தகவல்களை நாளதுவரை ஆக்குவதற்கு மற்றும் பதிவு செய்யப்படாதவர்களை வைத்திய சபையில் பதிவு செய்வதற்கு உரிய தகவல்கள் சேகரிப்பதற்காக மாகாண ஆணையாளர்கள் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) பிரிவு 19(1)(அ) | சபையினால் அந்த சபையின் செயலாளர் எனவும் அலுவலர் குழாமின் தலைமை அதிகாரி எனவும் செயற்பட வேண்டிய பதிவாளர் ஒருவர் நியமனம் செய்ய வேண்டியிருந்த போதிலும், அந்தப் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதில் கடமை அடிப்படையில் தொடர்ச்சியாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆயுர்வேத வைத்திய சபையின் முழு நேர அடிப்படையில் பதிவாளர் ஒருவர் சபையின் அங்கீகாரத்தின் மீது நியமனம் செய்யப்பட்டுள்ளது எனவும், பதிவாளர் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிப்பதற்கு உரிய விதிகள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக 2024.02.07 திகதி அச்சகத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதன்படி, ஆயுர்வேத வைத்திய சபையின் பதிவாளர் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த செய்முறை பல வருட காலமாக செயற்படுத்தப்படுகின்ற போதிலும் இதுவரை முன்னேற்றமொன்று காட்டியிருக்கவில்லை. ஆயுர்வேத சட்டத்தின் படி விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பகுதி VII | | | |
| பிரிவு 61 | ஆயுர்வேத வைத்தியர் ஒருவராக பதிவு செய்திருந்த சந்தர்ப்பத்தில் பதிவு செய்தல் சான்றிதழ் ஒன்று பதிவாளரினால் அந்த நபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய நடவடிக்கை எடுக்காமல் சபையின் நிதியத்தை செலவீடு செய்து சான்றிதழ்கள் வழங்கும் 04 வைபவங்கள் நடாத்தப்பட்டிருந்தது, | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டியிருந்தவாறு 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 61 இற்கு இணங்க எதிர் காலத்தில் பதிவுச் சான்றிதழ்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி பதிவாளருக்கு மற்றும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் 2022.11.25 திகதிய 08/2022 தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் 2022.08.08 திகதிய 04/2022 இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செலவுகள் கடுமையாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு செய்தல் சான்றிதழ் தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகார சட்டம் | | | |
| (i) பிரிவு 38(1)(இ) | சபை நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையினை வெற்றிகரத் தன்மையுடன் | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடாத்திச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| | (ii) பிரிவு 38(2) | சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(1)(இ) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 | அரசாங்கப் பணம், வருமானம், முத்திரை அல்லது பண்டங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது பொறுப்பாக இருக்கும், காசோலைகளில் கையொப்பமிடும் உத்தியோகத்தர்கள் அந்த பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் அல்லது மாற்றப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் 2024 மார்ச் மாதம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | அரச பெறுகை வழிகாட்டல் 4.2.1 | குறைந்தளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகை அலுவல்கள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2.1 இற்கு இணங்க 2025 ஆண்டு முதல் செயற்படுமாறு 2024 ஆண்டின் போது பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை | அரச பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டு வருகின்றது என. | |
| (ஊ) | 2014 இன் ஒக்தோபர் 15 திகதிய 1884/36 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசபை விதிகள் | சபையில் பதிவு செய்துள்ள அனைத்து வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒருமுறை தனது பதிவினை புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 05 வருடங்களை மிகைத்திருந்த வைத்தியர்களின் பதிவினை புதுப்படுத்துவதற்காக சபையினால் போதியளவு முறையான செய்முறையொன்று இனங்கண்டு செயற்படுத்தியிருக்கவில்லை. அதன்படி, 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 13,016 வைத்தியர்கள் தமது பதிவிணை புதுப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | பதிவினை புதுப்படுத்தாதவர்கள் செயற்படு திறன் தொழிலாளர்கள் என கவனம் செலுத்தாமல் இருப்பதற்கும் பதிவினை 05 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் மாகாண அயுர்வேத ஆணையாளர் மூலம் அறிவுறுத்தப்படுகின்றது எனவும். பதிவினை புதுப்படுத்தாத ஆட்களின் பெயர் பட்டியலொன்று மாவட்ட ரீதியாக தயாரிக்கப்பட்டு மாகாண ஆயுர்வேத ஆணையாளர் மூலம் மற்றும் நடமாடும் அலுவலகங்கள் நடாத்தி பதிவினை புதுப்படுத்துவதற்கு இணைத்துக்கொள்ளும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், மற்றும் சுதேச வைத்தியப் பிரிவின் கீழ் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலில் இதனை உட்படுத்துவதற்கு அமைச்சிலிருந்து எழுத்துமூலம் வினவப்பட்டுள்ளது என. | வெளியிடப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்திய சபையின் விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் மற்றும் பதிவு செய்தலை புதுப்படுத்துவதற்காக ஊக்குவிப்பதற்கு பொறுத்தமான செய்முறை கடைபிடிக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் காசேட்டு மீதி ரூபா 7 மில்லயனுக்கும் ரூபா 12 மில்லியனுக்கும் இடைப்பட்ட சராசரி பொதுவான நாளாந்த கொடுக்கல் வாங்கல் தேவைப்பாட்டிற்கு தடுத்து வைத்து மீதித் தொகை முதலீடு செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபையின் மாதாந்த வருமானம் தொடர்பாக கவனம் செலுத்தி முதலீட்டுச் சொத்துக்களை நிர்மாணித்துக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என. | நிறுவனத்தின் எதிர்கால நிரந்தர உளமைக்காக முதலீட்டுச் சொத்துக்கள் நிர்மாணித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,758,138 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,266,179 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 3,491,959 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அரச மானியங்கள் தவிர செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 5,446,551 தொகையினால் அதிகரித்திருத்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) சபையின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான அரச மானியங்கள் தவிர முன்னைய ஆண்டின் போது ரூபா 12,704,691 தொகைக்கான சபையின் வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 18,946,083 தொகை வரை ரூபா 6,241,392 தொகையினால் எனப்படும் 49 சதவீதத்தினை முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் ரூபா 16,638,511 தொகைக்கான சபையின் மொத்தச் செலவுகள் மீளாய்வாண்டு ரூபா 17,533,945 தொகை வரை ரூபா 895,434 தொகையினால் அதாவது 5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் செயற்பாட்டுச் செலவு 4 சதவீதத்தினால் அதிகரித்துச் செல்லல் இதற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர்களின் தொழில்சார் துர்நடத்தைகள் தொடர்பாகவும், பதிவு செய்யப்படாத ஆயுர்வேத வைத்தியர்களாக தோற்றக்கூடிய ஆட்கள் தொடர்பாகவும் 2019, 2020, 2021 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளின் போது கிடைத்திருந்த 244 முறைப்பாடுகளில் 37 முறைப்பாடுகளின் விசாரணை அலுவல்கள் 2023 பெப்ரவரி 22 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | ஆயுர்வேத வைத்திய சபைக்கு கிடைக்கக்கூடிய சில முறைப்பாடுகள் முறைசார் விதமாக கிடைக்காததுடன் பெயர் குறிப்பிடப்படாத, முகவரி காணப்படாத, பிழையான முகவரிகளுடனான கிடைக்கக் கூடிய அந்த முறைப்பாடுகள் தொடர்ந்து விசாரணை மேற்கொள்வதற்கு போதியளவு தகவல்கள் காணப்படாமையால் மிகவும் அனைத்து ஆண்டுகளிலும் சிறியளவு எண்ணிக்கையானவையே மீதியாக காணப்படுன்றன என. 2019 – 2022 காலப் பகுதியில் மீதியாக காணப்பட்ட 17 முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாட்டாளர்களினால் எதுவித பின் விசாரணை ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் விசாரணைக்காக போதியளவு தகவல்கள் காணப்படாமையால் அந்த | அனைத்து முறைப்பாடுகளும் விசாரணை செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் முறைப்பாடுகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்ததல் மற்றும் கால ரீதியாக அதன் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யக் கூடியவாறு முழுமையான தகவல்கள் பேணிச் செல்ல வேண்டும் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறைப்பாடுகளை ஒதுக்கம் வைக்கப்பதற்காக 2024.02.13 திகதி வைத்திய சபை தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 18(இ) மற்றும் (ஈ) இன் கீழ் ஆயுர்வேத தாதிமார்களாக ஆட்களின் பெயர்கள் பதிவு செய்தல் மற்றும் ஆயுர்வேத மருந்தாளர்களாக ஆட்களின் பெயர் பதிவு செய்தல் வைத்திய சபையின் செய்பணியின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பதிவு செய்யப்பட்ட ஆட்கள் தொடர்பாக தகவல்கள் ஏதும் வரைபு வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1961 இன் 31 இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 18(இ) மற்றும் (ஈ) இன் கீழ் ஆயுர்வேத தாதிமார் மற்றும் மருந்தாளர்கள் பதிவு செய்தல் தொடர்பாக தகவல்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வருடாந்த அறிக்கையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | ஆயுர்வேத தாதிமார்கள் என ஆட்களின் பெயர்கள் பதிவு செய்தல் மற்றும் ஆயுர்வேத மருந்தாளர்கள் என பெயர் பதிவு செய்தல் தொடர்பாக தகவல்கள் வருடாந்த அறிக்கையில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதி அளவில் வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை 27,205 எனவும், இறந்த எண்ணிக்கை 4,024 தொகை எனவும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இறந்த பரம்பரை ரீதியான வைத்தியர்கள் தொடர்பாக சரியான தகவல்கள் நாளதுவரை ஆக்கப்பட்டு பெறக்கூடிய செய்முறையொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. மேலும், இறந்த வைத்தியர்களின் பதிவுகளை இரத்துச் செய்வதற்கும் அது தொடர்பாக பொது மக்களுக்கு அறிவிக்கக்கூடிய செய்முறையொன்று செயற்படுத்தியிருந்தமையால் குறிப்பிட்ட பதிவுச்சான்றிதழ் முறைகேடாக பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | பதிவினை புதுப்படுத்தல் மற்றும் இறந்த வைத்தியர்கள் தொடர்பான தகவல்கள் வைத்திய சபைக்கு அறிவிப்பதற்காக சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் கீழ் செயலாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைப் பட்டியலில் இவ்விடயம் உட்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் படி அமைச்சுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | பொருத்தமான மற்றும் சரியான தீர்மானம் எடுப்பதற்காக நாளதுவரையாக்கப்பட்ட மற்றும் சரியான புள்ளி விபரங்கள் பேணிச் செல்ல வேண்டும். |
| (ஆ) | 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை முதற் தடவையாக பதிவு செய்திருந்த 1139 வைத்தியர்களின் பதிவினை மீளாய்வாண்டில் புதுப்பித்தல் மூலம் ரூபா 1,880,280 இற்கான வருமானம் ஒன்றை சேகரிப்பதற்காக மதிப்பீடு | 2023 ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2015 – 2018 வரை பதிவு செய்யப்பட்டு ஆனால் இதுவரை பதிவினை புதுப்படுத்தியிருக்காத வைத்தியர்களின் பதிவினை | 2015 – 2018 வரை பதிவினை பெற்று இது வரை பதிவினை புதுப்படுத்தாத வைத்தியர்களின் பதிவினை புதுப்படுத்தி விரைவாக நிலுவை வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 672 வைத்தியர்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டு ரூபா 1,097,280 இற்கான வருமானமொன்று சேகரிப்பதற்காக சபைக்கு இயலாமல் இருந்தது. | புதுப்படுத்தும் அலுவல்கள் 2024 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அதன்படி, அதற்குரிய வருமானம் உழைத்துக்கொள்ள முடியுமாகும் என. | சேகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 20(1) இணங்க ஆயுர்வேத வைத்திய சபை நியதிச் சட்ட கூட்டுத்தாபனம் ஒன்றாக காணப்படுவதனால் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நிதிக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் முறையான மேற்பார்வை ஒன்றுடனான கணக்கீட்டு அலகொன்று நிறுவுவது தொடர்பாக ஆளுகைச் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன், சபையின் கணக்கு அலுவல்கள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்காக ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான கணக்காளரின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆயுர்வேத வைத்திய சபையின் கணக்கு அலுவல்கள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்காக 1997 ஆண்டு முதல் ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான கணக்காளரின் சேவையை பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும், 2018.11.27 திகதி சபைப்பத்திர இலக்கம் 20/02/05 படி ஆயுர்வேத வைத்திய சபைக்காக தனியார் கணக்காளர் பதவியொன்று ஏற்படுத்திக்கொள்ளல் தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துடன் கலந்துரையாடிய போதிலும் தனியாக கணக்காளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும், கணக்காளர் பதவியொன்று அங்கீகரித்துக் கொள்வதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | முறையான மேற்பார்வையுடன் கணக்கீட்டு அலகொன்று நிறுவுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் அலுவலர் ஒருவர் அல்லாத தலைவரின் பெயரில் 06 சந்தர்ப்பங்களில் ரூபா 292,100 இற்கான முற்பணம் ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், அவ்வாறு தலைவர் நேரடியாக சபையின் கொடுக்கல் வாங்கல்களில் தலையிடுதல் சர்ச்சைக்குரிய விடயமொன்றென அவதானிக்கப்பட்டது. | ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் பதவி அதிகாரத்தின் மூலம் ஆயுர்வேத வைத்திய சபையின் தலைவர் என கடமையாற்றுவதுடன் ஆயுர்வேத வைத்திய சபையின் கணக்கீட்டு அலுவலரும் ஆகும். மேலும், ஆயுர்வேத வைத்திய சபையின் முன்பணங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே உத்தியோகத்தர் பதிவாளர் ஆக காணப்படுகின்றமையால் பதிவாளர் முற்பணம் பெற்றிருந்த சந்தர்ப்பத்தில் அந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு முன்னர் மேலும் ஒரு முற்பணம் தேவைப்பட்ட போது தலைவரின் பெயரில் முற்பணம் பெறப்பட்டிருந்தது என. | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களின் படி முற்பணக் கொடுப்பனவு தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2011 ஜூன் 30 திகதி நடைபெற்ற 17 ஆவது ஆயுர்வேத வைத்திய சபையின் முதலாவது கூட்ட அறிக்கையில் தீர்மான இலக்கம் 17.19 இன் படி பரம்பரை ஆயுர்வேத வைத்தியர்களை பதிவு செய்யும் எழுத்துமூல பரீட்சைக்கு உரிய வினாத்தாள் விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வைத்திய சபையின் நலனோம்பு சபைக்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன்படி, வினாத்தாள்கள் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணம் குறிப்பிட்ட வருமானக் கணக்கிற்கு செலவு வைத்து அந்த வருமானத்தை உழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினை கழித்து சபையினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் தொகையொன்று நலனோம்பு சங்கத்திற்கு கொடுப்பனவு செய்தல் மற்றும் அந்த கொடுக்கல் வாங்கல்கள் நிதி கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளல், சரியான மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான செய்முறையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும், நலனோம்பு சங்கத்தினால் சபையின் நிருவாகத்திற்கு புறம்பாக சபையின் சேவை நாடுனர்களுக்கு முறைசாரா பற்றுச் சீட்டுக்கள் வழங்கி நேரடியாக வினாத்தாள்கள் விற்பனை செய்து மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்த ரூபா 211,650 தொகை அந்த நலனோம்பு சங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வினாத்தாள் தொகுதி விற்பனைக்காக நலனோம்பு சங்கத்தின் மூலம் பில் பத்திரமொன்று வழங்கி பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் சங்கத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததெனவும், மிகவும் சிறிய பதவியணியினர் காணப்படுகின்ற ஆயுர்வேத வைத்திய சபையின் பதவியணியில் நலனோம்புக்காக வழங்கியிருந்த இந்த அங்கீகாரத்தின் படி வெளிப்படைத் தன்மையுடன் இந்த வருமானம் நலனோம்பு சங்கத்திற்கு வழங்கும் செய்முறையொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சபை தீர்மானத்திற்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 மூலோபாய திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 02 இன் படி அறிமுகப்படுத்தியிருந்த | அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம் சார் கட்டுபாடு தொடர்பான வழிகாட்டல் 2.3 பந்தியின் | முலோபாயத் திட்டம் தயாரிப்பதற்கு அரச தொழில் முயற்சிகளுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம் சார் கட்டுபாடுகள் தொடர்பான வழிகாட்டலின் பந்தி 2.3 பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய மூலோபாய திட்டம் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் முலோபாயத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாபனம் சார் கட்டுபாடுகள் தொடர்பான வழிகாட்டலின் படி செயற்பட வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 02 இன் படி அறிமுகப்படுத்தியிருந்த அரச தொழில்முயற்சிகளுக்கான தாபனம் சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டலின் 2.3 பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்க வேண்டிய இலக்குகள் மூலோபாயங்கள், மதிப்பீட்டுக் கிரயம் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் காலச் சட்டகம் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக இலக்கு சதவீத ரீதியாகவும் மற்றும் நிதி இலக்குகள் ரூபாகளின் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை. | அரச தொழில் முயற்சிகளின் தாபனம் சார் கட்டுப்பாடு தொடர்பாக வழிகாட்டல் 2.3 இன் படி தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி காலாண்டு அடிப்படையில் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு செய்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், ஆயுர்வேத வைத்தியர்கள் பரம்பரை ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்கள், மருந்து கலவையாளர்கள் பதிவு செய்வதற்காக பரீட்சைகள் நடாத்துதல், பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுதல் ஆகிய செய்முறைகளில் கருமங்களை | செயலாற்றுகை சுட்டிகள் நிறுவுவதற்கு தேவையான அலுவல்கள் திட்டமிடல் தொடர்பாக ஆயுர்வேத வைத்திய சபையின் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன்படி, 2022 ஆண்டு முதல் பரம்பரை வைத்தியர்கள் பதிவு செய்தலை எதிர்பார்க்கும் என்ற வகையில் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் மார்ச் 01 | திட்டமிடப்பட்ட செய்முறைகளின் கருமங்களை மதிப்பாய்வு செய்வதற்கு செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பாய்வு செய்வதற்காக செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு செயலாற்றுகையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திகதி முதல் ஜூன் 30 திகதி வரையும் நேர்முகப் பரீட்சைகள் நடாத்துதல் ஜூலை 01 முதல் திசெம்பர் 31 வரையும் நடாத்துவதற்கும் எழுத்துமூல பரீட்சைகள் பெப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்கில் நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டு அதனை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது என. | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் படி நிறைவேற்றப்பட வேண்டிய 50 செயற்பாடுகளில் 14 செயற்பாடுகள் அதாவது 25 சதவீதம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு இயலாமல் இருந்தது என அவதானிக்கப்பட்டது. | 2023 ஆண்டில் ஆயுர்வேத வைத்திய சபை மூன்று சந்தர்ப்பங்களில் திருத்தப்படல் மற்றும் 04 மாதங்களுக்கு அண்மித்த காலம் 23 ஆவது வைத்திய சபை நியமனம் செய்யப்படாமையால் திட்டமிடப்பட்ட கருமங்களில் 25 சத வீத செயற்பாடுகள் செயற்படுத்துவதற்கு இயலாமல் இருந்தது என. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் இயன்றளவு தத்துரூபமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதில் அடங்கியுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக கூடிய கவனத்துடன் செயற்பட வேண்டும். |
| (ஈ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டு ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆயுர்வேத மருந்து கலவையாளர்கள் என ஆட்களின் பெயர்களை பதிவு செய்தலின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதம் என காட்டப்பட்டிருந்த போதிலும், 2020 ஜூன் 02 திகதியின் பின்னர் தாதி உத்தியோகத்தர்களும் 2019 செப்தம்பர் 24 திகதியின் பின்னர் ஆயுர்வேத மருந்தகர்களை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்து கலவையாளர்களை பதிவு செய்வதற்கான தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் பதிவு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை என. அதன்படி, ஏற்பட்டிருந்த தவறொன்றின் காரணமாக முன்னேற்றம் நூறு சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்ததெனவும், 2024 இல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் இயன்றளவு தத்துரூபமாக தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 40 இற்கு இணங்க | ஆயுர்வேத வைத்திய சபையின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் | ஆயுர்வேத வைத்திய சபையின் உள்ளகக் கணக்காய்வு |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் ஆளுகை சபையினால் உரிய முறையில் நியமனம் செய்யப்படும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் காணப்பட வேண்டியிருந்த போதிலும் ஆயுர்வேத வைத்திய சபைக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஆயுர்வேத திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், ஆயுர்வேத வைத்திய சபைக்காக உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று ஏற்படுத்துவது தொடர்பாக ஆயுர்வேத வைத்திய சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தது எனவும், இதன்படி, செயற்படுவதற்கு ஆரம்பிக்கும் வரை ஆயுர்வேத திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தில் ஆயுர்வேத வைத்திய சபை தொடர்பான செயற்பாடுகளை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) சபையின் நிதி அலுவல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன்படி, உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு ஆயுர்வேத திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் ஒரு செயற்பாடு மாத்திரம் கணக்காய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டு ஒரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தது. | ஆயுர்வேத திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற கணக்காய்வுத் திட்டத்தின் ஆயுர்வேத வைத்திய சபை தொடர்பாக தொழிற்பாடுகள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபையின் நிதி அலுவல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.4 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க, சுற்றறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கான நிறுவனம் சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 4.2 இணங்க சபையினால் மீளாய்வாண்டின் 04 | 2024 ஆண்டின் போது இந்த சிக்கலை தீர்க்கக்கூடியவாறு 2024 மார்ச், ஜூன், செப்தம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலாண்டுகளிலும் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | | |

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 04 செலவு விடயங்களில் மீண்டுவரும் செலவுகளுக்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளை மிகைத்து உள்ளவாறான செலவு மேற்கொண்டிருந்ததுடன், அது 14 சதவீதம் முதல் 44 சதவீதம் வரையான வீச்சில் பரவியிருந்தது. மேலும், மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் தொடர்பாக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காத போதிலும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 23,950 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | தே.பா.சு. 05/2022 இன் படி மூலதன சொத்துக்கள் தனதாக்குவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும் 2022.11.08 திகதிய வைத்திய சபை தீர்மானத்தின் படி பண்டங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அரச ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும் ஆயுர்வேத சபையின் வருமானத்திலிருந்து மேற்கொள்ள முடியும் என தீர்மானிக்கப்பட்டமையால் வைத்திய சபையின் தரவு பாதுகாத்துக்கொள்ளும் குறிக்கோளுடன் External Hard Disk ஒன்று கொள்வனவு செய்யும் அத்தியவசியமாக காணப்பட்டமையால் ரூபா 23,950 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது என. | பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான ஊழியர் கடன் முற்பண உச்ச செலவு வரையறை ரூபா 1,200,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான ஊழியர் கடன் கொடுப்பனவு ரூபா 1,573,000 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 373,000 இனால் மதிப்பீட்டுத் தொகையை மிகைத்திருந்தது. | 2024 ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட செலவு வரையறையின் படி செயற்படுவது எனவும், மேலும் அறையாண்டு அடிப்படையில் செலவு மதிப்பீடு தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடன் முற்பணம் உச்சமட்ட செலவு வரையறையினுள் செயற்பட வேண்டும். |
| (இ) | 2023 ஜனவரி 27 திகதிய 01/2023 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் (ஈ) பந்திக்கு இணங்க தகவல்கள் தொடர்பாடல் | 2024 ஆண்டின் போது இது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப பயன்பாடு, டிஜிடல் பயன்பாடு, நிகழ்வு நிலை சேவை வழங்குதல் ஆகிய செய்முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் சபையின் மீண்டுவரும் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளை குறைத்தல் தொடர்பாக மூலோபாயங்களை திட்டமிடப்பட்டு செயற்படுத்துதல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் 06 வருமான மூலங்களின் மதிப்பீட்டு வருமானத்தை மிகைத்து உள்ளவாறான வருமானம் மிகைத்து உழைத்திருந்ததுடன், அது (51.67) சதவீதம் முதல் 341.75 சதவீதம் வரையான வீச்சில் பரவியிருத்தல் காரணமாக சபையின் வருமானம் உரிய முறையில் தத்துரூபமாக மற்றும் புத்திசாலித் தனமாக மீளாய்வு செய்யாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | 2023 ஆண்டு பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தல் அதன்படி, வாய்மொழிப் பரீட்சைக்காக அனுப்பிய கடிதங்களின் எண்ணிக்கை அதிகரித்தல், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் பாரிய எண்ணிக்கையானர்கள் வெளிநாடு செல்வதற்காக விண்ணப்பித்தல், அரச வங்கிக் கொள்கைகள் மாற்றமடைதல் காரணமாக நிலையான வைப்புக்களின் முதலீட்டு வட்டி சதவீதம் அதிகரித்தல் போன்ற காரணத்தினால் 2023 ஆண்டில் மதிப்பீட்டு வருமானம் கூடிய வருமானமொன்றை உழைக்கக் கூடியதாக இருந்ததெனவும் மற்றும் 2024 ஆண்டில் இந்த வருமான மதிப்பீடு அரையாண்டு அடிப்படையில் மீண்டும் பகுப்பாய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபையின் வருமானம் உரிய முறையில் தத்துரூபமாக மற்றும் புத்திசாலித் தனமாக மீளாய்வு செய்து மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.6 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான ''நிகழ்ச்சி நிரலுக்கு'' இணங்க அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க ஆயுர்வேத வைத்திய சபையின் கீழ் காணப்படும் | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குவது தொடர்பாக இலக்குகள், |

வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக சபை தனது விடயப் பரப்பின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என தொடர்பாக போதிய கவனத்துடன் செயற்பட்டிருக்கவில்லை. அதன்படி, ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க நிறுவனத்தின் கருமங்களுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

விடயங்கள் தொடர்பாக ஆயுர்வேத வைத்திய சபை அங்கத்தவர்களை அறிவுறுத்தப்பட்டதெனவும், செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.

சுட்டிகளை இனங் காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.